1973 மார்ச் 6]

திரு. கே. என். குமாரசாமி: திருப்பூரானது கைத்தறித் துணிகளிலும், கதர் துணிகளிலும் சாயம் ஏற்றுவதில் மிகவும் பிரசித்திபெற்ற இடமாகும். ஆகவே அங்கு திறமையான ஊழியர்களை உண்டாக்குவதற்கு ஒரு பயிற்சிக்கூடம் ஏற்படுத்துவதின்மூலம் கைத்தறித் துறையில் இப்படிப்பட்டதொரு சூழ்நிலை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுமே, அதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது காஞ்சீபுரம், மதுரை, கும்பகோணம் ஆகிய மூன்று இடங்களில் இதுபோன்ற பயிற்சி கொடுக்கப்படுகிறது. இப்போதைக்கு அங்கு திறப்பதாக யில்லை.

பிசாட்டூர் கால்வாயின் குறுக்கே சிறுபாலம்

* 321 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், தாராட்சி கிராமத்திற்கு வடக்கே செல்லும் பிசாட்டூர் பொதுப்பணித் துறைக் கால்வாயின் மீது சிறு பாலம் கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதன் செயற்குறிப்பு தல அதிகாரிகளின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : இது பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். முன்னால் ஆண்டவர்கள் காலத்தில் அந்தப் பொதுப்பணித்துறை கால்வாயின் மேல் பாலம் கட்டாமல் கிராமம் வேறாகவும் அவர்களுக்குரிய நிலங்கள் வேறாகவும் இப்படி இரண்டாக அந்தக் கால்வாயினால் பிரிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் ஏரு வண்டிகளைக் கொண்டு போக முடியாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் வந்து அதை நேராகப் பார்த்திருப்பதால் தயவுசெய்து நடவடிக்கைகள் எடுத்து இந்த ஆண்டே அதை அமல்படுத்தி அதை நிறைவேற்றித் தர முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆரணியாற்றின் குறுக்கே தாராட்சிக் கிராமத்திற்கு அருகே ஒரு மரப்பாலம் கட்ட ப்ரப்போஸல் இருக்கிறது. இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.